சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – நெடுஞ்சாலைத் துறை – கருணையடிப்படைப் பணி நியமனம் – காலஞ்சென்ற திரு.எம்.சண்முகம் என்பவரின் மகன் திரு.ச.சிவக்குமார் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை

அரசாணை (2ப) எண். 46

நாள் 09.12.2020.
சார்வரி, கார்த்திகை 24,
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25 கடித எண்.32747/நிர்.1(2)/2000, நாள் 05.09.2020.

----------

ஆணை:–

நெடுஞ்சாலைத்துறையில் திருவள்ளூர் (நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு உட்கோட்ட அலுவலகத்தில் உருளை ஓட்டுநராகப் பணிபுரிந்து வந்த திரு.எம்.சண்முகம் என்பவர் 05.01.1998 அன்று பணியிடையே காலமானார். அவரது பணி உருளை ஓட்டுநர் பதவியில் 01.01.1977 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. அவரது மனைவி திருமதி.ச.மோகனாம்பாள் என்பவர் கேட்டுக் கொண்டதன் பேரில் அவரது மகன் திரு.ச.சிவக்குமார் என்பவர் நெடுஞ்சாலைத் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 30.08.2019 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார். அவர் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 21 ஆண்டுகள் 08 மாதங்கள் ஆகும். எனவே, தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது குறித்த தகுதிகளை நிறைவு செய்துள்ளதாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் தனியரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரியவில்லை என்பதற்கும் அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகளையும் மற்றும் அவரது பணி வரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றுகளையும் அரசுக்கு நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் சமர்ப்பித்துள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப்

பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ச.சிவக்குமார் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 30.08.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்வதற்கு அரசின் ஆணையினைப் பெற்றுத் தருமாறு நெடுஞ்சாலைத்துறை, முதன்மை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநரின் செயற்குறிப்பை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, அதன்படி, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நெடுஞ்சாலைத் துறையில் கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.ச.சிவக்குமார் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 30.08.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், தனியர் அப்பதவியில் பணி நியமனத்திற்குரிய போதிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண். 16549/க்யூ2/2020-1, நாள் 21.11.2020 மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத்துறையின் அ.சா.எண். 31104/ஜி2/2020-1, நாள் 02.12.2020-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை - 25.
திரு.ச.சிவக்குமார், இளநிலை உதவியாளர் (நெ).
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25. வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை-600018.

<u>நகல்:-</u>
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை-9.
அரசு துணைச் செயலாளரின் நேர்முக எழுத்தர்,
நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை-9.
தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, சென்னை-9.
பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.
(C.No.9460/HM1/2020)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
9/12/2020